

Shalom

தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 500/–

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 10
இதழ் : 2
டிசம்பர் – 2013

"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக..."

(லூக்கா 2 : 14–)

ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்

சுதேச ஊழியரின் சாட்சி

## போதகர். கல்சிங் புரியா

**உதய்புரா,** மத்தியப்பிரதேசம்




இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! எனது பெயர் கல்சிங் புரியா. நான் இயேசுவை அறியாததற்கு முன்பு பாவத்திலும், சாபத்திலும் மட்டுமல்ல சாராயம், பீடி, தம்பாக்கு போன்றவைகளுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தேன். எனக்கு திருமணமான பின் பிறந்த இரண்டு ஆண் குழந்தைகளும் மரித்துவிட்டன. ஒரு பெண் குழந்தை மட்டும் பிழைத்தது. அதன்பின் எங்கள் குடும்பத்தின் சந்ததி பெருகாதபடிக்கு பில்லி சூனியம் செய்துவிட்டார்கள். இதன் மூலம் எனது மனைவியின் வயிற்றில் ஒரு கட்டி வந்தது. இதற்காக நான் மந்திரவாதிகளை நாடினபொழுது அவர்கள் கூறினார்கள் : நீயும் மந்திரவாதியாக மாறிவிடு அப்பொழுது உன் குடும்த்தின் மீதுள்ள சாபம் நீங்கும் என்று. ஆகவே நான் 6 வருடமாக மந்திர கிரியைகளைச் செய்து வாழ்ந்து வந்தேன்.

ஆனாலும் எனது மனைவியின் வயிற்றிலுள்ள கட்டி குறையவோ குணமாகவோ இல்லை. குடும்பத்தில் சமாதானம் இல்லாத இந்த சூழ்நிலையில் எனது நண்பர் சகோ. கோர்சிங் மெய்டா அவர்கள் எனக்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்து கூறி என்னை ரூன்கேடா என்ற கிராமத்தில் நடைபெற்று வரும் இயேசுவின் கூட்டத்திற்கு அழைத்துச் சென்றார். அதில் நாங்கள் குடும்பமாகப் பங்கு பெற்று இயேசு கிறிஸ்துவை அறிந்து, ஜெபித்தபோது தேவன் எனது மனைவியின் வயிற்றில் இருந்த கட்டியினை எடுத்துப் போட்டார். அதன்பின் டேபர் கிராமத்தில் பிஷப். தேவதாஸ் & சகோதரி வஹிதா தேவதாஸ் ஆகிய இருவரும் நடத்திய ஒரு மூப்பர் கூட்டத்தில் பங்கு பெற்றேன். அந்தக் கூட்டத்தில் என்னைப் பிடித்திருந்த பிசாசுகள் ஓடின. அதன்பின் நாங்கள் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு விசுவாசிகளானோம். தேவன் எங்களுக்கு 3 ஆண் குழந்தைகளைக் கொடுத்து ஆசீர்வதித்தார். 1997 ஆம் ஆண்டு நான் எனது வாழ்க்கையை தேவ ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்து எனது வீட்டில் கூட்டத்தினை ஆரம்பித்தோம். அதன்பின் ஷாலோம் வேதாகமப் பயிற்சி பெற்று ஊழியம் செய்து வந்தேன். தற்போது B.Th., முடித்து போதகராக அபிஷேகம் பெற்று ஊழியம் செய்து வருகிறேன். எங்கள் சபையில் 75 குடும்பத்தார் தேவனை ஆராதித்து வருகின்றனர். மேலும் 5 கிளை சபைகளையும், 5 ஊழியர்களையும் எழுப்ப தேவன் கிருபை செய்துள்ளார். எனக்காகவும் எனது குடும்பத்திற்காகவும் நாங்கள் செய்து வரும் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Pr. சுவாமிதாஸ், இயேசு நம்மோடு ஊழியங்கள், சென்னை.**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2000/– ஜெபித்து கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரத தேசம் எங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரை அனுப்புவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

## உங்கள் சகோதரனிடமிருந்து



*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்கள். இவ்வாண்டு முழுவதும் தேவன் நம்மை பாதுகாத்ததற்காக அவருக்கு நன்றி செலுத்தி துதிக்கிறேன். பிதாவாகிய தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரன் இயேசு கிறிஸ்துவை மனுக்குலத்தின் மீட்புக்காக இவ்வுலகத்திற்கு அனுப்பி தம் அன்பை வெளிப்படுத்தினார். இம்மாபெரும் கிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தியைக் கேட்டறிந்துகொண்ட அனைவரும் பிரசித்தம் செய்தார்கள். நாமும் கிறிஸ்துவின் பிறப்பை பிரசித்தம் செய்து நம் சந்தோஷத்தை இப்படியாக பெற்றுக் கொள்வோம்.

நவம்பர் மாதத்தில் தேவ கிருபையால் CBN ஸ்தாபனத்தின் மூலமாக குஜராத்தில் 25 கிராம சபைகள் உள்ள கிராமங்களில் ஆழ்குழாய் கிணறுகள் வசதி செய்து (Hand Pumps) கொடுக்கப்பட்டு குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது. நம் ஷாலோம் சுதேச ஊழியர்களின் குடும்பத் தரிசன முகாம் 2013 நவம்பர் 18 முதல் 21 வரை மிக ஆசீர்வாதமாக நடைபெற தேவன் கிருபை தந்தார்.

மேலும் இயேசு விடுவிக்கிறார் குழுவினர் நவம்பர் 22–24 வரை பணித்தளத்திற்கு வருகை தந்து ஆலயப்பிரதிஷ்டைகளைச் செய்து ஊழியங்களை நிறைவேற்றினார்கள்.

டிசம்பர் மாதத்தில் நம் சுதேச ஊழியர்கள் ஆதிவாசி மாணவர்களுக்காக கிறிஸ்துமஸ் பண்டிகைக்கான புத்தாடைகளை வழங்கவும், கிறிஸ்துமஸ் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் தேவையான நிதி உதவி **ரூ.10 இலட்சங்கள்** கிடைக்கப்பெறவும் ஜெபியுங்கள். பத்திரிக்கையை வாசிக்கும் நீங்கள் ஒவ்வொருவரும் ஜெபித்து ஒரு சிறிய பங்கையாவது அனுப்பி தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

2013 ஆம் ஆண்டு முழுவதும் நம்மை நடத்தி வந்ததற்காகவும் கர்த்தர் செய்த சகல உபகாரங்களுக்காகவும் ஸ்தோத்தரிப்போம். புதிய ஆண்டில் பிரவேசிக்கப் போகிற நாம் புதிய கிருபைகளைப் பெற்றுக் கொள்ள ஜெபத்துடன் ஆயத்தப்படுவோம்.

அடியேனுக்காகவும் என் மனைவி வஹிதாவுக்காகவும் ஜெபியுங்கள். குறிப்பாக ரஷ்யாவில் 4 ஆம் ஆண்டு மருத்துவப்படிப்பு படித்துக்கொண்டிருக்கும் அன்பு மகள் ஷெக்கினாவிற்காகவும் ஜெபியுங்கள்.


**“கர்த்தரைத் துதியுங்கள். அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது.”** (சங்.118:29)

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

கீழ்க்கண்ட அலைபேசி எண்ணுடன் என்னோடு தொடர்பு கொள்ளவும்
09377445468 (குஜராத்) 9443965468 (தமிழ்நாடு)

# கிறிஸ்துமஸ் கீதங்கள்



சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பான கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள். மனுக்குலத்தை மீட்கும்படியாக பிதாவாகிய தேவன் தம் ஒரே பேரான குமாரன் இயேசு கிறிஸ்துவை தந்தருளி தம் அன்பை வெளிப்படுத்தினார். இப்பூமியில் தேவக் குமாரன் மனிதனாகப் பிறந்த செய்தியே உலகத்தில் வாழும் அனைவருக்கும் சொல்லப்பட்ட நற்செய்தியாகும். கிறிஸ்துவின் பிறப்பின் நிகழ்ச்சிகளை வாசித்துத் தியானிக்கும் போது பிதாவாகிய தேவன் "காலம் நிறைவேறினபோது" எவ்வளவு அழகும் நேர்த்தியுமாக காரியங்களை நிறைவேற்றினார் என்று அறிகிறோம். சுவிஷேசப் புத்தகங்களை நாம் வாசிக்கும் போது அதில் அநேகக் கீதங்களைக் காண்கிறோம். அவைகள் யாவும் தீர்க்கதரிசன நிறைவேறுதலாகவும் தேவனுடைய துதி கீதங்களாகவும் அமைந்ததை பார்க்கிறோம். அவற்றுள் சில கீதங்களை நாம் தியானிப்போம்.

## சகரியாவின் கீதம்

கிறிஸ்துவுக்கு முன் பாதைகளை செவ்வைப்படுத்த தேவன் யோவான் ஸ்நானகனை அனுப்பினார். அதற்காக தேவன் தெரிந்து கொண்ட பாத்திரங்கள் சகரியா –எலிசபெத் தம்பதியர்கள். ஊழிய காலத்தை முடித்துவிட்டு ஓய்வு பெற்றாலும் யோவான் ஸ்நானகனை பெற்றெடுக்க இஸ்ரவேலில் இளமையான தம்பதிகளையெல்லாம் தெரிந்தெடுக்காமல் உண்மையாக ஊழியம் செய்த இவர்களைத் தேவன் தெரிந்து கொண்டார். நாம் தேவனுக்கு உண்மையாக வாழும் போது தேவன் நம்மைப் பயன்படுத்த வயது ஒரு போதும் தடையில்லை. லூக்கா 1 ஆம் அதிகாரம் 67 முதல் 80 வரையுள்ள வசனங்களைப் பார்க்கும்போது சகரியா தன் கீதத்தில் முதலாவது தீர்க்கதரிசிகள் மூலமாக தேவன் உரைத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறார் என்பதைத் தெளிவாகக் கூறுகிறார். அதுமட்டுமன்றி கிறிஸ்துவானவர் அந்தகாரத்திலும், மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சமாக அருணோதயம் நம்மை சந்தித்திருக்கிறது என்றான்.

மெய்யாகவே நம்முடைய பாவங்கள், சாபங்கள், நோய்கள், பிசாசின் பிடி போன்றவற்றிலிருந்து நம்மை விடுதலையாக்கிய அருணோதயமான கிறிஸ்துவை நாம் தொழுதுகொள்வோம்.

## எலிசபெத்தின் கீதம் : (லூக்கா1: 41:45)

சகரியாவின் வீட்டிற்குள் பிரவேசித்து எலிசபெத்தை மரியாள் வாழ்த்துகிறாள். மரியாளுடைய வாழ்த்துதலைக் கேட்டபோது அவளுடைய வயிற்றில் இருந்த பிள்ளை துள்ளிற்று. எலிசபெத் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு பாடல் பாடினாளென வேதத்தில் வாசிக்கிறோம். கர்ப்பத்தின் கனி தேவன் தரும் ஆசீர்வாதம். தேவப் பிள்ளைகள் கர்த்தருடைய நாமத்தில் ஒருவரையொருவர் வாழ்த்துவது எத்தனை மகிழ்ச்சி. வயிற்றில் வளரும் கருவானது கூட அதைக் கேட்டுத் துள்ளுவது எத்தனை மகிழ்ச்சியான காரியம்.

எலிசபெத்தின் பாடலை நாம் தியானிக்கும் போது தேவப் பிள்ளைகள் ஒருவரையொருவர் வாழ்த்தி கனப்படுத்தி அன்பு கூற வேண்டுமென அறிந்திருக்கிறோம். அப்படி ஒருவரையொருவர் பரிசுத்தத்தோடே வாழ்த்தும் போது தேவ நாமம் மகிமைப்படுகிறது. நம்முடைய சந்ததியையும் தேவன் தாயின் கர்ப்பத்திலேயே தெரிந்தெடுத்து ஆசீர்வதிக்கிறார்.

### மரியாளின் கீதம்

லூக்கா 1: 46–55 ஐ வாசித்துப்பார்க்கும் போது தேவன் தெரிந்து கொண்ட பாத்திரமான மரியாள் வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார் என்று சொல்லி பரிசுத்தமுள்ள அவர் நாமத்தைத் துதித்து, கர்த்தரை மகிமைப்படுத்துகிறாள். அவள் ஆவி தேவனில் களிகூறுகிறது. தன்னை அடிமையாக தேவனுக்கு முன்பாக தாழ்த்துகிற உன்னதமான அனுபவத்தைப் பாருங்கள். கன்னியாக இருக்கும் தன் வாழ்வில் தேவ சித்தம் நிறைவேற தன்னை அடிமையாக ஒப்புக் கொடுத்து தேவனுக்காக எந்த நிந்தையையும் சுமக்க ஒப்புக்கொடுத்து அதை பாக்கியமாக கருதுகிறாள். பிதாக்களுக்கு அவர் சொன்ன வாக்கை நினைத்து நிறைவேற்றுகிறார் என தேவனை மகிமைப்படுத்துகிறாள். இந்த பண்டிகை நாட்களில் நம் வாழ்வில் எந்த நிந்தனைகள், கஷ்டங்கள் வந்தாலும் தேவசித்தத்திற்கு நம்மை அடிமைகளாக தாழ்த்தி ஒப்புக் கொடுப்போம்.

### சிமியோனின் கீதம் : (லூக்கா 2: 28–35)

கிறிஸ்துவின் வருகைக்காக இஸ்ரவேலின் ஆறுதல் வர காத்திருந்த தேவ மனிதன் தான் சிமியோன். தேவனுடைய ஸ்தலமாகிய எருசலேமில் நீதியும், தேவ பக்தியும் உள்ளவனாக வாழ்ந்தான். பரிசுத்த ஆவியானவர் அவன் மீது இருந்தார்.

அவனுடைய விசுவாசத்தின்படியே தேவ ஆவியானவர் கிறிஸ்துவைக் காணும் முன்பாக மரணமடைய மாட்டாய் என்று கூறப்பட்டார். அந்தப்படியே தன் கைகளில் ஏந்திக்கொண்டு தேவனைத் துதிக்கும் பாக்கியத்தைப் பெற்றார். கிறிஸ்து பாலகன் புற ஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளியாகவும் இஸ்ரவேலுக்கு மகிமையாகவும் கண்டார். தேவன் சகல ஜனங்களுக்கும் கிறிஸ்துவை இரட்சிப்பாக அனுப்பிய தேவக் குமாரனை என் கண்கள் கண்டது என மனமாற வாழ்த்தி, என் வாழ்வு சமாதானமாக முடிகிறது என தேவனை மகிமைப்படுத்துகிறார்.

கிறிஸ்துவின் கரங்களில் ஏந்தி அவரைக் கண்டு துதித்த சிமியோனைப் போல நாமும் இயேசு பாலகனைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரை ஆராதித்துப் பாடும்போது தேவ சமாதானம் நம்மை நிரப்பும்.

### தேவ தூதர்களின் கீதம் (லூக்கா 2: 13–14)

சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொடுக்கும் இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தியை தேவ தூதன் மேய்ப்பருக்கு அறிவிக்கிறான். **தேவதூதன் அவர்களை நோக்கி பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து**

**என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையை துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். அந்தஷணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி** (லூக்கா: 2: 10–13) அந்த நற்செய்தியை அறிவித்து, பரம சேனைகள் திரளாக தூதர்களுடன் சேர்ந்து பாடி மகிமைப்படுத்துவதைக் காண்கிறோம். உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள். (லூக்கா: 2: 14)

கிறிஸ்துவின் பிறப்பின் நிமித்தமாக உன்னதத்தில் தேவனுக்கு மகிமை உண்டானது. உன்னதமானவரின் பலம் மரியாள் மீது நிழலிட்டது. உன்னதமானவருடைய குமாரன் என இயேசு அழைக்கப்பட்டார். உன்னதத்தில் தேவனுக்கு மகிமை உண்டானது மட்டுமன்றி பூமியில் சமாதானம் எனப் பாடி துதித்தார்கள். இன்றைக்கு உலகத்தில் தனிமனிதனுக்கும் குடும்பம் மற்றும் தேசத்திற்குத் தேவை சமாதானம். சமாதானப்பிரபு இயேசு பூமியில் வந்ததால் சமாதானம் உண்டானது. நமக்கு சமாதானம் கிடைக்கும்படி அவர் நமக்காக பாவமாகி, சாபமாகி பலியான ஆட்டுக்குட்டியாக சாந்த சொரூபியாக அவதரித்தார். மேலும் மானிடரின் மேல் பிரியம் உண்டாவதாக என வாழ்த்தினார்கள். மனுஷர்கள் பாவம் செய்து பாவ இருளில் தேவனை விட்டுத் தூரமாகச் சென்ற போது தேவக்குமாரனாகிய இயேசுவின் மூலமாக அன்பும் மனதுருக்கமும் தயையும், மன்னிப்பும் உண்டானது. ஆகவே கிறிஸ்துவின் பிறப்பு மனுஷர்களிடையே பிரியத்தை உண்டாக்கியது.

கடைசியாக தேவ தூதனான பரம சேனை திரளான தூதர்களும் வாழ்த்தும் போது நாமும் கிறிஸ்து எனக்காகவும் உலகத்தின் மீட்புக்காகவும் பிறந்தார் என தேவனுக்கு மகிமையைச் செலுத்தி ஆராதிப்போம்.

தூதர்கள் மூலமாக இயேசு பாலகனின் பிறப்பின் செய்தியைக் கேட்ட மேய்ப்பர்கள் தீவிரமாக வந்து மரியாளையும், யோசேப்பையும் முன்னணையில் கிடத்தியிருக்கிற இயேசு பாலகனைக் கண்டார்கள். லூக்கா 2:20 இன்படி தேவனை மகிமைப்படுத்தி துதித்துக் கொண்டு திரும்பிப் போய் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம் பண்ணினார்கள்.

அது போலவே 84 வயதான அன்னாள் இயேசு பாலகனைக் கண்டு கர்த்தரைப் புகழ்ந்து எருசலேமிலே மீட்புண்டாகும்படி காத்திருந்த யாவருக்கும் இயசேு பாலகனைப் பேசினாள். (லூக்கா 2 : 37–38)

கிறிஸ்துமஸ் என்றாலே நம் அனைவருக்கும் தேவனாகிய கர்த்தரை இயேசு கிறிஸ்துவை பரிசுத்த ஆவியானவரை, திரியேக தேவனை வாழ்த்திப் பாடி துதித்து ஆராதிக்க வேண்டும். கிறிஸ்து நம் அனைவருக்காகவும் பிறந்தார் என்று ஆவியில் நிறைந்து ஆத்துமாவில் களிகூர்ந்து சரீரத்தால் அவரை மகிமைப்படுத்துவோம். மட்டுமன்றி கிறிஸ்துவின் பிறப்பை நாம் பிரசித்தம் செய்வோம். பிரஸ்தாபப்படுத்துவோம். **தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**



## மத்தியப்பிரதேசம் மற்றும் குஜராத் மாநிலங்களில் ஷாலோம் சிறுவர் சிறப்பு முகாம்கள் - 2013

கர்த்தரின் மாபெரும் தயவால் கடந்த அக்டோபர் 5 ஆம் தேதி குஜராத்திலுள்ள ஹிரோலா Compassion பிள்ளைகளுக்கு நடைபெற்ற சிறப்பு முகாமில் சுமார் **225** சிறுவர்கள் கலந்து கொள்ள தேவன் கிருபைச் செய்தார். அது போல **17.10.2013** அன்று மத்தியப் பிரதேசத்திலுள்ள அந்தர்வேலியாவில் Compassion பிள்ளைகளுக்காக நடந்த சிறப்பு முகாமில் **282** சிறுவர்கள் கலந்து கொண்டார்கள். **19.10.2013** அன்று குஜராத் ஜெரி கிராமத்திலுள்ள Compassion பிள்ளைகளுக்கு நடைபெற்ற சிறப்பு முகாமில் **198** சிறுவர்கள் கலந்து கொண்டார்கள்.

இது மட்டுமல்லாமல் குஜராத்திலுள்ள ஊழியர்களின் பிள்ளைகளுக்கு நடைபெற்ற சிறுவர் முகாமில் **118** சிறுவர்கள் கலந்து கொண்டார்கள்.

மேற்கண்ட கூட்டங்களில் சிறுவர்கள் பாடல்களைப் பாடி, ஆடி உற்சாகத்தோடு தேவனை ஆராதித்தார்கள். இந்த ஆராதனையில் அநேகர் பரிசுத்த ஆவியில் நிரம்பி பாவ மன்னிப்பையும் விடுதலையையும் பெற்றார்கள். மட்டுமல்லாமல் குறு நாடகம் நடத்தப்பட்டதால் இதன் மூலம் அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டனர். இம்முகாமில் ஜெபமே ஜெயம் என்ற தலைப்பில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் யோவான் 14 : 14 இன்படி தேவ செய்தியளித்தார்கள். ஜெபம் என்றால் என்ன? ஜெபம் எப்படி செய்வது? ஜெபத்தினால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் என்ன? போன்றவற்றைக் குறித்து செய்தியில் விளக்கமாகக் கூறப்பட்டது. இதைக் கேட்ட அநேகர் அழுது ஜெபித்து, தானியேலைப்போல 3 வேளையும் ஜெபிக்க தங்களை ஒப்புக் கொடுத்தார்கள்.

### குழு கலந்துரையாடல்

தொடர்ந்து **குழு கலந்துரையாடல்** நடைபெற்றது. இதில் ஜெப வாழ்க்கையைப்பற்றி விவரித்துக் கற்றுக் கொடுக்கப்பட்டது. ஜெபத்தின் இரகசியத்தைப்பற்றி எல்லா சிறுவர்களும் நன்கு புரிந்து கொண்டார்கள். இறுதியாக சிறுவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு அவர்களின் கிராமங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

### தேவனைத் துதித்து, ஜெபியுங்கள்!

குஜராத், தாகோத்திலுள்ள நமது ஷாரோன் நினைவு மருத்துவமனையின் தலைமை மருத்துவரான டாக்டர் இன்பக்குமார் அவர்களுக்கு கடந்த **06.11.2013** அன்று திடீரென மாரடைப்பு ஏற்பட்டதால் உயிருக்கு மிகவும் ஆபத்தான நிலையிலிருந்தபோதும், சரியான நேரத்தில் பரோடாவிலுள்ள இருதய மருத்துவமனையில் சேர்க்கப்படவும், சரியான சிகிச்சை கொடுக்கப்படவும் தேவன் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை! தற்போது டாக்டர் இன்பக்குமார் அவர்களுக்கு தேவன் பூரண சுகத்தையும் புதிய ஜீவனையும் தந்து ஆசீர்வதித்துள்ளார். இதற்காக தேவனைத் துதியுங்கள்! மேலும் இவருக்காகவும் ஷாரோன் நினைவு மருத்துவமனைக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

## *ஷாலோம் சிறுவர் முகாம்களில் தேவன் தந்த சாட்சிகளில் சில*

**மனிஷா மெய்டா:**

சிறுவர் முகாம் மூலம் நான் ஆசீர்வதிக்கப்பட்டேன். தானியேலுடைய வாழ்க்கையைக் குறித்து குறுநாடகத்தின் மூலம் **"ஜெபம் தான் தானியேலின் வெற்றிக்குக் காரணம்"** என்றும், ஆகையால் நானும் எந்நாளும், எந்நேரமும் ஜெபிக்க வேண்டும் என்று தீர்மானம் எடுத்து அர்ப்பணித்துள்ளேன்.

**வனித்தா அமளியார்:**

சிறுவர் முகாமில் நடைப்பெற்ற பாடல், ஆராதனையின் மூலம் அதிக மகிழ்ச்சியடைந்தேன். Sis. Vahitha Devadass அவர்களின் ஜெபத்தைக் குறித்த செய்தியின் மூலம் நான் தொடப்பட்டேன். ஜெபமே ஜெயம் என்று அறிந்து கொண்டேன். என் உலக வாழ்க்கை மாறி, ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேறியுள்ளேன். தானியேலை சிங்கத்தின் வாயிலிருந்து விடுவித்த ஆண்டவர் என்னையும் பாவத்தில் இருந்து விடுவித்தார். ஆகையால் தானியேலைப் போல, ஜெபிக்க தீர்மானித்தேன். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டேன். உள்ளத்தில் சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைந்தேன். தேவனுக்கே மகிமை!

**நரேஷ் மெய்டா:**

சிறுவர் முகாமில் நடைப்பெற்ற தானியேலைப் பற்றிய குறுநாடகம் மூலம் தேவன் என்னோடு பேசினார். நான் என் வாழ்க்கையில் தானியேலைப் போன்று மூன்று வேளை ஜெபிக்கும் படியாய் தீர்மானித்துள்ளேன்.

**ஜித்னேஷ்புரியா:**

சிறுவர் முகாமில் நடைப்பெற்ற குழு கலந்துரையாடலின் மூலமாக ஜெபத்தைக் குறித்து நன்றாக அறிந்துக் கொண்டேன். மற்றும் எனக்குள் இருந்த சந்தேகங்களுக்குப் பதில் கிடைத்தது. கடைசி ஜெபவேளையில் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் என் தலை மீது கைகளை வைத்து ஜெபித்த போது பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டேன். மட்டுமல்லாமல் தேவன் என்னைத் தொட்டு என் சரீரத்தை சுகப்படுத்தி என்னை ஆசீர்வதித்ததற்காக அவருக்கே நன்றி.

**கோவிந்த் மேடா:**

ஜெபம் ஏன் பண்ணவேண்டும் என்ற விளக்கத்தையும் ஜெபத்தின் மூலம் தான் பிசாசை ஜெயிக்க முடியும் என்றும் கற்றுக் கொண்டேன். கடைசி ஜெப வேளையில் தேவன் என்னோடு கூட தகப்பன் பிள்ளையோடு பேசுவது போலப் பேசினார். அந்த நேரம் என் உள்ளம் எல்லையில்லா சந்தோஷத்தினால் நிரப்பப்பட்டது.

**ஜினாப்பேன்:**

சிறுவர் முகாமில் அளிக்கப்பட்ட ஜெபமே ஜெயம் செய்தியின் மூலம் ஜெபத்தின் வல்லமையை அறிந்துக்கொண்டேன். ஜெப வேளையில் தேவன் என்னை பரிசுத்த ஆவியினால் நிரப்பினார். என் உள்ளம் சந்தோஷத்தினால் நிரப்பப்பட்டது.

# மத்தியப்பிரதேசம் மற்றும் குஜராத் மாநிலங்களில் ஷாலோம் சிறுவர் சிறப்பு முகாம்கள் - 2013




சிறுவர்களுக்கான சிறப்பு செய்தியளிக்கும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்



பாடல் வேளை






குறுநாடகங்கள் மற்றும் பொம்மலாட்டம் வாயிலாக சிறுவர்களுக்கு சிறப்பு ஆலோசனைகள்





கலந்து கொண்டு பயன்பெற்ற சிறுவர் கூட்டம்





## புதிய ஊழியர் பயிற்சியில் தேவன் எழுப்பிய சாட்சிகள்

**ஊழியர் : பிரகாஷ் மெய்டா,** ஊர் : கல்ப்புரா, மத்தியப்பிரதேசம்



எனது பெயர் பிரகாஷ் மெய்டா. நான் இம்மாதம் ஷாலோம் 1 மாத வேதாகமப்பயிற்சியில் வந்து வேதாகமத்தைப் பற்றியும் ஊழியம் செய்வது பற்றியும் நன்கு கற்றுக்கொள்ள தேவன் கிருபைச் செய்தார். எனக்கு 3 வருடங்களாக வாயில் ஒரு கட்டி இருந்தது. மருத்துவரிடம் சென்று பரிசோதித்தபோது கேன்சர் கட்டி என்று கூறிவிட்டார்கள். எவ்வளவு மருத்துவம் செய்தும் பயனில்லாமல் வாயிலிருந்து இரத்தம் மற்றும் கோழை வடிந்து கொண்டேயிருந்ததால் அதிக கஷ்டப்பட்டேன். சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் பாவம் மற்றும் பாவமன்னிப்பை குறித்துப்பேசி, இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட வேண்டும் என்று கூறி ஜெபம் ஏறெடுக்கும் வேளையில் நானும் ஜெபித்தேன். உடனடியாக வாய்க்குள் இருந்த கட்டி உடைந்து எல்லா அசுத்தமும் வெளியேறி வடிந்து கொண்டிருந்த கோழையும் உடனடியாக நின்று விட்டது. என் உடம்பில் இருந்த பயங்கரமான வலியும் உடனடியாக நீங்கியது. என்னை சுகப்படுத்தின தேவனுக்காக ஊழியம் செய்வேன் என்று என்னை அர்ப்பணித்தேன். தேவனுக்கே மகிமை !

**பெயர் : பூரிபேன் மெய்டா,** ஊர் : ஹத்தியாதல்லி, மத்தியப்பிரதேசம்



எனது பெயர் பூரிபேன் மெய்டா. நாங்கள் குடும்பமாக ஊழியம் செய்ய அர்ப்பணித்து ஷாலோம் 1 மாத வேதாகமப்பயிற்சியில் பங்கு பெற்றோம். நான் அடிக்கடி வியாதியினால் பாதிக்கப்பட்டதினால் கடந்த 3 வருடங்களாக எனது 2 காதுகளும் கேட்காது. சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகலப்பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என்பதைக் கூறி ஜெபித்த போது ஜெப வேளையில் என்னுடைய 2 காதுகளும் திறந்து விட்டது. இப்பொழுது காது நன்றாகக் கேட்கிறது. தேவனுக்கே மகிமை !



**சிறுவர் முன்னேற்ப் பணியாளர்களுக்கான சிறப்புக் கூடுகையில் தேவன் எழுப்பிய சில சாட்சிகளில் ஒன்று**

**பெயர் : பல்வந்த் ஹட்டில்லா,** ஊர் : கரத்துவாரா,

என் பெயர் பல்வந்த் ஹட்டில்லா. நான் ஷாலோம் சபையைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. சிறு பிராயத்திலிருந்து ஹாஸ்டலில் படித்து வந்தேன். கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு கம்பேஷன் ப்ராஜெக்ட் – ஜெரியில் ஆசிரியராக கடந்த 5 வருடமாக ஊழியம் செய்து வருகிறேன். ஆனாலும் பரிசுத்த ஆவியைப் பற்றியும், அந்நிய பாஷையைப் பற்றியும் மிகுந்த சந்தேகம் இருந்தது. அடிக்கடி சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் என்னிடம் பரிசுத்த ஆவியின் அவசியம் பற்றி கூறுவார்கள். தேவனுடைய வல்லமையை நான் உணர்ந்தேன். என்மீது ஒரு ஒளி வந்து இறங்கி என் முழு ஆவி, ஆத்துமா, சரீரத்தையும் ஆட்கொண்டது. பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிரப்பப்பட்டேன். அந்நிய பாஷைகளைப் பேச ஆரம்பித்தேன். என் உள்ளத்தில் ஒரு அளவில்லா சந்தோஷமும், சமாதானமும் இறங்கி என்னையும் அறியாமல் விழுந்தேன். பரிசுத்த ஆவியானவர் எவ்வளவு உண்மையுள்ளவர் என்பதை உணர்ந்தேன். எனது மனைவியும் அந்த நாளிலே அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டாள். எங்களை குடும்பமாய் அபிஷேகித்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

# £ßYoØuú] \lT ¦ Vô[oLÞdLô] £\l×d áÓûL

தேவனுடைய கிருபையினால் **22–10–2013** அன்று **3** Project களில் இருந்து Directors, Co-ordinator மற்றும் Staff 35 பேர்களுக்கு விசேஷமான ஆவிக்குரிய கூட்டம் Dahod Centre - ல் வைத்து நடைபெற்றது. இந்த நாளில் ஆசிரியர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையில் பலத்த கிரியைகளை தேவன் செய்தார். பாடல் ஆராதனை வேளையிலே தேவனுடைய மகிமை இறங்கி வந்தது. எல்லோரும் சிறுபிள்ளைகள் மீது பாரம் கொண்டவர்களாய் அவர்களுக்காக அழுது ஜெபித்தார்கள். Sis. Vahitha Devadass அவர்கள் பரிசுத்த ஆவியானவர் யார் என்றும், பரிசுத்த ஆவியானவரின் அவசியம் பற்றியும், பரிசுத்த ஆவியானவரால் கிடைக்கும் ஆசீர்வாதங்களைப் பற்றியும் மிகவும் நேர்த்தியாக **2** செய்திகளை அளித்தார்கள். வந்திருந்த ஆசிரியர்களில் அநேகர் பலவித எண்ணங்களோடு வந்திருந்தார்கள். சிலருக்கு பரிசுத்த ஆவியானவர் அவசியம் தானா? அந்நிய பாஷை உண்மையா? நாம் அதைப் பேச வேண்டுமா? என்ற சந்தேகங்கள் இருந்தது.

என்ன ஆச்சரியம்! தேவன் பலத்த வல்லமையாய் இறங்கினார். வந்திருந்தவர்களில் ஒரு சிலர் தவிர மற்ற யாவரும் அபிஷேகம் பெற்று அந்நியப் பாஷையில் பேசத் தொடங்கினார்கள். சந்தேகத்துடன் வந்தவர்களும் கூட ஆவியின் நிறைவைப் பெற்றார்கள். பரிசுத்த ஆவியானவர் இன்றும் நம்மோடு கூட இருந்து கிரியை செய்கிறார். ஆசிரியர்கள் பிள்ளைகளைக் குறித்த ஒரு உண்மையான பாரத்தைப் பெற்று இன்னும் அதிகமாய் தேவனுக்காக ஊழியம் செய்யத் தங்களை அர்ப்பணித்தார்கள். பிள்ளைகளைப் பிசாசு கொள்ளைப் பொருளாய் கொண்டு போய் விடக்கூடாது. மற்றும் சத்துருவின் கையிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற பொருளிலிருந்து ஆசிரியர்களுக்கு Creative Games நடத்தப்பட்டது. 3 Project Co-ordinators இந்த Programme களை நடத்தினார்கள். பின்பு மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த நாள் முகாம் மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக

**பங்குப்பெற்ற ஆசிரியர்களின் சாட்சிகளில் ஒன்று..**

**டாரத்தி பாபோர்,** கிராமம் : ஜாலோத்

எனது பெயர் **டாரத்தி.** நான் ஜாலோத்தில் உள்ள CNI சபையைச் சேர்ந்த விசுவாசி. நான் கடந்த **6** வருடங்களாக ஹிரோலா கிராமத்தில் நடைபெற்று வருகிற கம்பேஷன் ப்ராஜெக்ட்டில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன். நான் எப்பொழுதும் ஷாலோம் ஊழியத்தில் செய்யப்படும் சேவைகளைப் பார்த்து பரவசமடைவேன். ஆனாலும் ஜெபிக்கும் போது, அந்நிய பாஷைகளைப் பேசுவதை கேட்கும்போது என் மனதுக்குள்ளே கேலி செய்து சிரிப்பேன். நாளடைவில் பக்கத்தில் இருப்பவர்களையும் சேர்த்துப் பேசி சிரிக்க ஆரம்பித்தேன். பின்பு என் குடும்பத்தில் அதிக போராட்டத்தைச் சந்திக்க நேரிட்டது. ஆனாலும் அதைக் குறித்து கவலைப்படமாட்டேன். இன்று **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் பரிசுத்த ஆவியானவரைப்பற்றிப் பேசும் போதும் கூட என் உள்ளத்தில் சிரிப்பு வந்தது. ஆனாலும் மெதுவாக தேவன் என் உள்ளத்தில் கிரியைச் செய்ய ஆரம்பித்தார். ஜெப வேளையில் ஆவியானவருடைய பிரசன்னம் என்னைத் தாக்கியதால் தூக்கி எறியப்பட்டேன்.

# கிறிஸ்துமஸ் நாட்களின் நிகழ்வுகளின் பின்னணிகள்

தெகுப்பு : சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்

## கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் (CHRISTMAS CELEBRATION)

கிறிஸ்துமஸ் டிசம்பர் 25 இல் உலகமெங்கும் உற்சாகமாய் கொண்டாடப்படுகிறது. ஆனால் கிறிஸ்து டிசம்பர் 25 இல் தான் பிறந்தார் என்று சொல்ல முடியாது. 4 வது நூற்றாண்டில் ரோமாபுரி திருச்சபை பேராயர்கள் டிசம்பர் 25 ஆம் தேதி கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடலாம் என்று தீர்மானித்தனர். அதற்கான காரணங்கள் பின்வருமாறு.



ஆரம்பக்காலத்தில் ரோம சாம்ராஜ்ஜியத்தில் சூரியன்தான் கடவுள் என்று வணங்கிக் கொண்டிருந்தனர். டிசம்பர் மாதத்தில் சூரியக் கடவுளுக்கு சிறப்பான பண்டிகை கொண்டாடினர். ரோமத் திருச்சபையின் தலைவர்கள் இந்த கலாச்சாரத்தை மாற்றும் எண்ணத்தோடு டிசம்பர் மாதத்தில் குளிர்கால பண்டிகை நடத்த தீர்மானித்தனர். அந்த பண்டிகைதான் வருங்காலங்களில் கிறிஸ்துமஸ் பண்டிகையாக மாறியது.

மரியாளுக்கு தேவதூதன் மூலமாக இயேசுவின் பிறப்பு அறிவிக்கப்பட்டது. மார்ச் 25 ஆம் தேதி அதிலிருந்து 9 மாதங்கள் கணக்கிட்டு கிறிஸ்துவின் பிறப்பு டிசம்பர் 25 என முடிவு செய்தனர். யூதப் பண்டிகையாகிய ஹனுக்கா ( Hanukka ) என்ற தீபப் பண்டிகை கிஸ்லேயா மாதத்தில் 25 ஆம் தேதி அதாவது டிசம்பர் 25 இல் கொண்டாடப்பட்டது. இயேசு ஒரு யூதனாயிருந்தபடியால் அந்த நாளையே கிறிஸ்துமஸை கொண்டாடுவது என தீர்மானித்தனர்.

Christ- mass என்ற கிறிஸ்துவை ஆராதிக்கும் ஆராதனையை குறிக்கும் வார்த்தை தான் மருவி கிறிஸ்துமஸ் என்று அழைக்கப்பட்டது. எப்போதெல்லாம் கிறிஸ்துமஸ் கொண்டாடப்படுகிறதோ அப்போதெல்லாம் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த ஓர் உண்மை சம்பவமாகிய கிறிஸ்து பிறப்பை இவ்வாறாக கிறிஸ்துமஸ் ஆக கொண்டாடுகிறோம் என்பதை மாறந்துவிடக் கூடாது.

## கிறிஸ்துமஸ் தாத்தா (CHRISTMAS FATHER)



கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் ஆசியாமைனரில் உள்ள மையிரா என்ற இடத்தில் நிக்கோலஸ் என்ற பேராயர் வாழ்ந்து வந்தார். இந்த இடம் துருக்கி என்று கருதப்படுகிறது. அவருடைய பெற்றோர் இறந்துவிட்டபடியால் அவர்களின் சொத்து முழுவதும் நிக்கோலஸ்க்குக் கிடைத்தது. ஆகவே இவரை பெரிய பணக்காரர் என்று மக்கள் அழைத்தனர். ஆனால் இவர் பெரிய பணக்காரர் என்ற கர்வம் கொள்ளாது

ஏழை எளிய மக்களுக்கு இரகசியமாக பரிசுகள் வழங்கி வந்தார். ஆகையால் இவரது புகழ் வெகுவாக உலக நாடுகளில் பரவியது. இவரைக் குறித்து அநேக கதைகள் சொல்லப்படுகின்றன. அவைகளில் ஒன்று ஒரு மனிதனுக்கு 3 பெண் பிள்ளைகள் இருந்தார்கள். அவரது ஏழ்மை நிலை காரணமாக பிள்ளைகளுக்குத் திருமணம் நடத்த முடியாமல் இருந்தார். இதைக் கேள்விப்பட்ட நிக்கோலஸ் இரவில் ஒருவருக்கும் தெரியாமல் தங்க நகைகள் அடங்கிய ஒரு பையை அந்த ஏழை வீட்டின் புகைக் கூண்டு வழியாக போட்டுவிட்டார். அதை எடுத்து அந்த ஏழை தந்தை தன் மகள்களுக்குத் திருமணத்தைச் சிறப்பாக முடித்து வைத்தார். இதை நிக்கோலஸ்தான் செய்தார் என்பதை எப்படியோ அந்த மனிதர் அறிந்து கொண்டார். ஆனால் இதை யாரிடமும் சொல்லக்கூடாது என்று நிக்கோலஸ் அந்த மனிதரிடம் கேட்டுக் கொண்டார். ஆனால் இந்த செய்தி மக்கள் மத்தியில் பரவிற்று. அவருடைய அன்பைக் கண்டு மக்கள் அனைவரும் அவரைப் புனிதரென்று அழைக்க ஆரம்பித்தனர்.

ஒரு சமயத்தில் துருக்கி கடல் பகுதியில் பயங்கரமான புயல் விசிற்று. அப்போது கடலில் பிரயாணம் செய்த கப்பல் மாலுமிகள் பயந்தனர். அவர்கள் நிக்கோலஸை நினைவுக் கூர்ந்து ஜெபித்தனர். திடீரென்று பார்த்தால் கடலில் நிக்கோலஸ் நிற்பது போன்று தெரிந்தது. கடலும் அமைதியாயிற்று என்ற பாரம்பரியக் கதை ஒன்று உண்டு. புனித நிக்கோலஸ் மைராவிலிருந்து நாடு கடத்தப்பட்டு சிறையில் வைக்கப்பட்டார். அவர் எப்போது மரித்தார் என்று தெரியவில்லை. 1807 ஆம் ஆண்டு அவருடைய கல்லறையிலிருந்து அவருடைய எலும்புகள் இத்தாலி வியாபாரிகளால் களவாடிச் செல்லப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர். 6 ஆம் தேதியில் பாரி நாட்டின் மாலுமிகள் அவருடைய உருவச்சிலையை ஆலயத்திலிருந்து கடலுக்கு எடுத்துச் சென்று தங்களுடைய கடல் பயணம் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று வேண்டுவதுண்டு. இவ்விதமாக பரிசளித்த நிக்கோலஸ் தான் கிறிஸ்துமஸ் தாத்தாவாக கருதப்பட்டார். 1862 ஆம் ஆண்டு மூர் என்பவருடைய மாடலைக் கொண்டு நாஸ்ட் என்ற ஒருவர் சாண்டாகிளாஸ் போன்ற படங்களை வரைந்தார்.

### கிறிஸ்துமஸ் மரம் (CHRISTMAS TREE)



ஆரம்பக்கால ரோம மக்கள் விவசாய கடவுள் Saturn க்கு பண்டிகையைக் கொண்டாடுவார்கள். அது குளிர் காலமாதலால் பசுமையான மரங்களாலும், இலைகளாலும் தங்கள் வீட்டை அலங்கரிப்பர். 16 ஆம் நூற்றாண்டில் ஜெர்மனி தேசத்தில் கிறிஸ்துமஸ் மரக் கலாச்சாரம் ஏற்படுத்தப்பட்டது. கிறிஸ்தவர்கள் தங்கள் வீடுகளில் மரங்களை நட்டு அழகுப்படுத்தினர். மார்டின் லூத்தர் இந்த மரங்களுக்கிடையே மெலுகுவர்த்திகளை ஏற்றி நட்சத்திரங்களை தொங்கவிட்டு அழகுப்படுத்தினர். 19 ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியர்களைப் பின்பற்றி அமெரிக்கர்கள் கிறிஸ்துமஸ் மரங்களை வைத்து அழகுப்படுத்தினர். 1659 ஆம் ஆண்டு ஆலிவர் கிரகாம்பல் கிறிஸ்துமஸ் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வண்ணமாக கிறிஸ்துமஸ் மரங்களை நாட்டி அதை ஒரு புனித நிகழ்வாக ஏற்படுத்தினார். ஆனால் அதே ஆண்டு இங்கிலாந்து தேசத்தில் நீதிமன்றம்

டிசம்பர் 25 ஆம் தேதிதான் இதை ஆசரிக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தது. அந்த நாள் ஆராதனை தவிர்த்து மற்ற நாட்களில் கிறிஸ்துமஸ் மரத்தை அலங்கரிக்கக் கூடாது. அப்படிச் செய்தால் தண்டனை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

1890 இல் கிறிஸ்துமஸ் அலங்காரப் பொருட்கள் ஜெர்மனியிலிருந்து அமெரிக்காவுக்குக் கொண்டு வரப்பட்டது. 20 ஆம் நூற்றாண்டில் அமெரிக்கர்கள் கையினால் செய்த பொருட்களினால் கிறிஸ்துமஸ் மரத்தை அலங்கரித்தனர். பிற்காலங்களில் மின் விளக்குகளாலும் அலங்கரித்தனர். இப்போது எல்லாத் திருச்சபைகளும் கிறிஸ்துமஸ்க்கு முன் தினங்கள் கிறிஸ்துமஸ் மரங்களை நாட்டி பரிசுகளை வழங்கிச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். ஏழை எளிய மக்களை நினைவு கூர்ந்து கிறிஸ்துமஸ் காலங்களில் பரிசுகள் வழங்குவதற்கு கிறிஸ்துமஸ் மரத்தைச் சிறப்பாக பயன்படுத்துகிறோம்.

## கிறிஸ்துமஸ் கீதங்கள் (CHRISTMAS CAROLS)

முதல் முறையாக ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்துமஸ் கீதங்கள் பாட ஆரம்பித்தனர். அவர்கள் ஒரு கல்லை மத்தியில் வைத்து அதைச் சுற்றி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். குறிப்பாக



குளிர்காலம் டிசம்பர் 22 இல் இந்த ஆடல் பாடல் நடைபெற்றது. கேரல் என்ற வார்த்தைக்கு நடனம் அல்லது மன மகிழ்ச்சியின் பாடல் என்று பொருள்படும். இந்த ஆடல் பாடல் எல்லாம் அந்நிய தெய்வ வழிபாடு செய்யும் மக்களிடமிருந்து வந்த கலாச்சாரம் என்றனர். கி.பி. 129 ஆம் ஆண்டு ரோம பேராயர் இந்த பாடல்களை தூதர்களின் பாடல்கள் என்று அழைத்தார். அந்நாட்களில் இலத்தின் மொழிகளில் அதிகமான கிறிஸ்துமஸ் பாடல்கள் இருந்தன. இதை சாதாரண மக்கள் புரிந்து கொள்ள முடியவில்லை. 1823 ஆம் ஆண்டு புனித பிரான்சிஸ் ஆப் அசிஸிஸ் இத்தாலி தேசத்தில் சில நாடகங்களையும் சேர்த்து சிறப்பான கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் எல்லா மக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் அமைத்தார். 1410 ஆம் ஆண்டு சிறிய பாடல் தொகுப்புதான் பாடப்பட்டது. இந்தப் பாடல் அனைத்தும் மரியாளைப் பற்றியும், இயேசுவைப் பற்றியும் அமைந்தது.

விக்டோரியா மகாராணி காலத்தில் கிறிஸ்துமஸ் கீத ஆராதனை பரவ ஆரம்பித்தது. பாடகர் குழுவாக வைத்து இப்பாடல்களைப் பாடி பணம் வசூலித்தனர். அதற்குப் பின் மெழுகுவர்த்திகளை ஏந்தி கிறிஸ்துமஸ் பாடல்கள் பாடினால்தான் சிறப்பாக இருக்குமென்று கருதினர். தற்போது உலகமனைத்தில் கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனைகள் சிறப்பாக நடத்தப்படுகிறன. 1918 ஆம் ஆண்டு உலக மகா யுத்தம் முடிந்தது. இப்படிப்பட்ட ஆராதனை நடத்தப்பட்டது. இந்த கீத ஆராதனையில் தான் **ONCE IN ROYAL DAVID'S CITY** என்ற பாடல் பாடப்பட்டது. பாடலின் இடை இடையே வேதபாடங்களும் வாசிக்கப்பட்டது. இவ்வித கிறிஸ்துமஸ் கீத ஆராதனைகள் கிறிஸ்துவின் பிறப்பைப் பல வடிவத்திலும் அமைத்து பாடல்களாக வெளிவந்துள்ளன. இது கிறிஸ்துமஸ் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதோடு அந்த மகிழ்ச்சியை பிறரோடு பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கிறது.

*கவிச்சோலை : கிறிஸ்துமஸ் கவிதை :*

# ஷாரோனின் ரோஜா தொழுவத்திலே

ஞானம் இல்லா மனிதர்களுக்கு
தினம் ஆறுதல் தந்திடவும்

சினம் கொண்ட மானிடரின்
மனம் முழுவதும் மாற்றிடவும்

பணம் இல்லா எளியவர்க்கு
தினம் சந்தோஷம் தந்திடவும்



சொந்தம் இல்லா அனாதைகட்கு
பந்தம் பாசத்தை அளித்திடவும்

பாவியை இரட்சித்து அவர்களின்
ஆவியை எளிமை யாக்கிடவும்



எண்ணில் அடங்கா நன்மைகளை
என்னில் உன்னில் செய்திடவும்

நிலுவையில் உள்ள பாவங்களை
சிலுவையில் தொங்கி போக்கிடவும்

நித்தம் அனைவரையும் இரட்சித்து
மொத்தம் சொர்க்கத்தில் சேர்த்திடவும்

தேவ மைந்தன் இயேசு நாதர்
பாவ மனிதர்களை மீண்டெடுக்க

விந்தை கிறிஸ்து மேசியாவாம்
மந்தை ஆடுகள்மேல் அன்பு கொண்டு

சத்திய வேதம் உரைத்தபடி
நித்திய பிதாவின் செல்வமகன்

பாக்கியம் பெற்ற மரியாள் வயிற்றினிலே
வாக்கியம் நிறைவேற கருத்தரித்து

நாட்டு மக்களின் மேல் கருணை கொண்டு
மாட்டு தொழுவத்திலே பிறந்தாரே!

பார்வோன் சதிகளை முறியடித்த
ஷாரோன் ரோஜா மட்டுமல்ல

லில்லி புஷ்பமும் இவர்தான் என
சொல்லி வாழ்த்தி வணங்குகிறேன்.



**Rev. S. சந்திர குமார்,** தூத்துக்குடி

## EjRU F¯VIT¦ *சகோ. ஜெய்சிங் செல்வக்குமார் குடும்பத்தாரின் பணித்தள வருகை*

தேவனுடைய பெரிதான கிருபையால் நாங்கள் குடும்பமாக ஷாலோம் பணித்தளத்தைச் சென்று பார்க்கவும் ஆலயத்தைப் பிரதிஷ்டை பண்ணவும் **28–9–13** அன்று மத்தியப்பிரதேசத்தில் உள்ள ஷாலோம் சபைகளைப் பார்வையிடக் கிருபைச் செய்தார். முதலாவது அந்தர்வேலியா ஷாலோம் சபையையும், நடைபெற்று வருகிற Children's Project - யையும் Pr. பூர்சன் புரியா குடும்பத்தையும் பார்த்து தேவனைத் துதித்தோம். பின்பு மேந்திகேடா சபையில் ஆராதனையில் பங்கெடுத்தோம். சபையில் விசுவாசிகளைப் பார்த்து அவர்கள் தேவனைத் துதித்து ஜெபிப்பதை அறிந்து பரவசமடைந்து தேவனுக்கு மகிமையைச் செலுத்தினோம். சபையில் போதகர். பாலுசிங் பாரியா குடும்பத்தைச் சந்தித்தோம். இதன்பின்பு காளாகேத் என்ற சபையைப் பார்வையிடவும் Pr. சர்தார் டாமோர் குடும்பத்தையும் சந்திக்க தேவன் கிருபைச் செய்தார். அதன்பின்பு மாண்ட்லி என்ற சபையையும் Pr. மென்சிங் டாமோர் இவர்களையும் சந்திக்கவும் தேவன் கிருபைச் செய்தார். தேவன் இந்த மக்கள் மத்தியில் இறங்கி கிரியை செய்து வருகிறதையும் ஊழியம் பரவி வருகிறதையும் பார்த்து தேவனை மகிமைப்படுத்தினோம்.

மறுநாள் **29–9–13** அன்று குஜராத்தில் முதன் முதல் ஷாலோம் மூலமாக கட்டப்பட்ட ஹிரோலா கிராம சபையையும் Pr.சுனில்கணவா மற்றும் விசுவாசிகளைச் சந்தித்து விட்டு பின்பு உடனடியாக அங்கிருந்து இராஜஸ்தான் பணித்தளத்தைப் பார்வையிடச் சென்றோம். இராஜஸ்தானில் முதலாவது கட்டப்பட்ட சபையாகிய கும்புரா ஆலயத்திற்குச் சென்று Pr.பத்யாகராசியா அவர்கள் குடும்பம் மற்றும் சபை விசுவாசிகளைப் பார்த்துவிட்டு அங்கிருந்து கோய்க்கா என்ற கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்டு வருகின்ற பெரிய ஆலயத்தைப் பார்வையிட்டு அதன் பின்பாக டும்மட் என்ற கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட ஆலய பிரதிஷ்டைக்காகச் சென்றோம். தேவன் எங்களோடு கூட இருந்து வழிநடத்தினார்.

டும்மட் கிராம ஆலயத்திற்குச் செல்லும் போது அதிகமான மழை பெய்தது. மட்டுமல்ல, வண்டியில் இருந்து இறங்கி 1 கி.மீ தூரம் வரை நடந்து தான் செல்ல வேண்டியதாயிருந்தது. அதிலும் கருப்பு நிற களிமண் பாதையில் மிகுந்த கஷ்டப்பட்டு சுதேச ஊழியரின் மனைவி என் மனைவியின் கையைப் பிடித்து மிக நேர்த்தியாக அழைத்துச் சென்றார்கள். அங்கு சென்றால் ஒரு கூட்டம் மக்கள் ஆலயத்தில் ஆர்வமாய் கலந்து கொண்டு இருந்தார்கள். **பேராயர். V. தேவதாஸ்** அவர்கள் ஜெபிக்க நான் இந்த டும்மட் ஷாலோம் ஆலயத்தை தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாகப் பிரதிஷ்டை பண்ணும்படியாய் தேவன் கிருபைச் செய்தார். பாடல் பாடிக்கொண்டே ஆலயத்திற்குள் பிரவேசித்து பின்பு துதி ஆராதனை நடைபெற்றது. மக்கள் மிகவும் உற்சாகமாய் ஆராதித்தார்கள். நான் இவர்களுக்கு இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்களைக் கூறவும் பேராயர் அவர்கள் தேவ செய்தியளிக்கவும் தேவ நாமம் மகிமைப்பட்டது. இந்த நாள் என் வாழ்க்கையில் மறக்க முடியாத நாளாக இருந்தது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது **பேராயர். V. தேவதாஸ்** அவர்களும் அவர்கள் மனைவியும் இந்த பீல் மக்கள் மத்தியில் செய்து வரும் பணி மிகவும் விசேஷமானது. இது ஒரு உத்தம ஊழியப்பணி. தேவன் தாமே அவர்களை இன்னும் பயன்படுத்துவாராக.

# சகோ. ஜெயசிங் செல்வக்குமார் குடும்பத்தாரின் (தூத்துக்குடி) பணித்தள வருகை





டும்மத் கிராம ஆலய பிரதிஷ்டை மற்றும் சபையாரின் உற்சாகமான வரவேற்பு (இராஜஸ்தான்)





மேந்திகேடா (ம.பி.) கிராம ஆலயம் – உற்சாகமான கலாச்சார வரவேற்பு



ஹிரோலா கிராம ஆலய பார்வை (குஜராத்)



காளகேத் கிராம ஆலய சந்திப்பு (ம.பி.)



கும்புரா கிராம ஆலய ஆராதனையில் (இராஜ)



கோய்க்காவில் கட்டப்பட்டு வரும் ஷாலோம் பேராலய பார்வை (இராஜ)

## ஷாலோம் கிராம ஆலயம்

# டும்மட் இராஜஸ்தான்



இராஜஸ்தான் மாநிலம் பான்ஸ்வாடா மாவட்டம் குஷல்கட் தாலுகாவில் டும்மட் என்ற கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராம பீல் ஆதிவாசி ஜனங்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறியாதவர்களாய் வாழ்ந்து வந்தனர். இந்தக் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரமேஷ் கட்டாரா என்பவரின் மூன்றாவது மகன் ஆசிஷ் கட்டாரா 3 ஆம் வயதில் வயிறு வீங்கியதால், மிகவும் வேதனைப்பட்டான். முதல் இரண்டு பிள்ளைகளும் பெண் பிள்ளைகள் என்பதால் ஆண் பிள்ளையை மிகவும் செல்லமாக வளர்த்தனர். பிள்ளையைக் காப்பாற்றுவதற்கு ஆதிவாசி முறைப்படி அனைத்து மந்திரப் பூஜைகளைச் செய்தும் எவ்வித மாறுதலும் இல்லாமல் குழந்தைகளின் நிலைமை மோசமாகிக் கொண்டே சென்றது. குழந்தையைப் பார்க்க சகோ. ரமேஷ் கட்டாராவின் தங்கை, திருமதி. ஹக்ரிபேன் பட்டேல் வந்திருந்தார்கள்.

இவர் ரஸ்கத்புரா என்ற கிராமத்தைச் சேர்ந்த ஷாலோம் சபையின் விசுவாசி. இந்த விசுவாசப் பெண்மணி தனது சபைப் போதகர் பாஸ்டர். ஹஹதுர்பட்டேல் என்பவரை அழைத்து வந்து ஜெபித்தவுடன் குழந்தை சுகமானது. இந்த அதிசயத்தைக் கண்டு குடும்பமாக இயேசுவை ஏற்றுக்கொண்டனர். இதன்பின் 2005 ஆம் ஆண்டு சகோ. ரமேஷ் கட்டாரா ஊழிய அழைப்பைப் பெற்று தனது கிராமத்தில் ஊழியம் செய்ய ஆரம்பித்தார். தற்சமயம் 37 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஆராதித்து வருகின்றனர்.

சகோ. ரமேஷ் கட்டாரா தனது நிலத்தை ஆலயம் கட்டுவதற்கு காணிக்கையாக அளித்துள்ள இடத்தில் தூத்துக்குடியைச் சேர்ந்த திரு. ஜெயசிங் செல்வக்குமார் அவர்களின் குடும்பத்தின் சார்பாகக் கொடுத்த நிதி உதவியால் தேவாலயம் கட்டப்பட்டு 29-9-13 அன்று சகோ. ஜெயசிங் செல்வக்குமார் அவர்களால் ஜெபத்துடன் பிரதிஷ்டை செய்யப்பட்டது.



**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2013 ஆம் ஆண்டிற்குள் 82 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

**ஷாலோம் கிராம ஆலயம்**

# தெமாரா

## மத்தியப்பிரதேசம்



மத்தியப்பிரதேச மாநிலம் ஜாபுவா மாவட்டத்தில் அமைந்துள்ளதுதான் தெமொரா கிராமமாகும். இந்தக் கிராமத்தைச் சேர்ந்த சகோ. மக்கன்சிங் இயேசு கிறிஸ்துவை அறியாமல் இருந்த நாட்களில் பில்லி சூனியத்தினால் தாக்கப்பட்டு சரீரத்தில் அதிக பெலவீனமடைந்து மருத்துவரிடமும் மந்திரவாதியிடமும் சென்று சுமார் ரூ. 20,000/– வரையிலும் செலவு செய்தும் எந்தப் பயனுமில்லை. இவரது பெரியப்பா சகோ. தேவ்சந்த் மெய்டா ஷாலோம் ஊழியத்தின் மூலமாக இயேசுவை அறிந்த விசுவாசி. இவர் சகோ. மக்கன்சிங் அவர்களுக்கு இயேசுவைப் பற்றிக் கூறி குஜராத்தில் உள்ள ஹிம்மாலாவ் கிராமத்தில் நடைபெற்ற இரவு கூட்டத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு வந்திருந்த ஷாலோம் ஊழியர்கள் இவருக்காக ஜெபித்த போது இவர் பூரண விடுதலை பெற்று விசுவாசியானார். பின்பு நமது ஷாலோம் ஊழியர் சகோ. முகேஷ் வாசுனியா அவர்களின் தங்கையைத் திருமணம் முடித்து, ஒரு வருடமாக கூலி வேலை செய்து வந்தார்.

அதன்பின் தேவன் இவரை ஊழியத்திற்கு அழைக்கவே 2006–இல் ஷாலோம் மூலம் நடைபெற்ற ஊழியருக்கானப் பயிற்சியும் பரிசுத்த ஆவியின் வல்லமையையும் பெற்று ஊழியம் செய்ய ஆரம்பித்தார். தற்போது 35 க்கும் அதிகமான குடும்பத்தார் இவர்மூலமாக இயேசுவை ஏற்றுக்கொண்டு தேவனை ஆராதிக்கிறார்கள். விசுவாசிகள் அதிகரிக்கவே தேவனை ஆராதிக்க ஆலயம் அவசியம் என உணர்ந்த இவர் தனது சொந்த நிலத்தை ஆலயம் கட்ட காணிக்கையாகக் கொடுத்தார். அந்த இடத்தில் சுமார் ரூ. 2,25,000/– செலவில் ஒரு அழகிய கிராம ஆலயம் கட்டப்பட்டு, 20.10.2013 அன்று சகோ. டென்சிங் ராஜ்குமார் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.



ஊழியருக்காகவும் அவரது மனைவி பிள்ளைகளுக்காகவும், இந்த கிராமத்தில் நடைபெறும் ஊழியம் வளரவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

இந்த கிராம ஆலயம் சகோ. டென்சிங் ராஜ்குமார் அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

# சகோ. டென்சிங் ராஜ்குமார் குடும்பத்தாரின் (சென்னை) பணித்தள வருகை





தெமேரா (ம.பி.) கிராம ஆலய பிரதிஷ்டை – ஜெபிக்கும் பிஷப் தேவதாஸ் அவர்கள் மற்றும்
ஆலயத்தை திறந்து வைக்கும் சகோ. டெனன்சிங் ராஜ்குமார் அவர்கள்



தெமோரா கிராம சபையில் கலாச்சார வரவேற்பு



ஆலய ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்கும் சகோதரி.



கோய்க்கா (இராஜ) கிராம ஆலயத்தில் வரவேற்பு



கும்புரா (இராஜ) கிராம ஆலய ஆராதனையில்



ரூபாகேடா (ம.பி.) கிராம ஆலயத்திற்கு முன்பு



ஷாரோன் நினைவு மருத்துவமனையில்

# Kn®u± SûPùTßm F¯VeLs

**சகோ. டென்சிங் ராஜ்குமார் குடும்பம்,** சென்னை.

1991 ஆம் ஆண்டு ஷாலோம் ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் 22 வருடங்கள் பேராயர். தேவதாஸ் அவர்கள் குடும்பத்திற்காகவும், தேவன் அவர்களுக்குத் தந்த பீல் ஆதிவாசி மக்களின் தரிசனப் பணிக்காகவும் நாங்கள் குடும்பமாக சேர்ந்து தாங்கி வருவதற்காக தேவனை துதித்து, மிக்க மகிழ்ச்சியடைகிறோம். ஊழியர்களை ஜெபித்து தாங்கி வந்தாலும் பல ஆண்டுகளாக ஒரு கிராம ஆலயம் கட்டிக் கொடுக்க வாஞ்சித்து ஜெபித்து வந்தோம். தேவன் அதை வாய்க்கச் செய்தார்.

அக்டோபர் மாதம் 27,28 தேதிகளில் ஷாலோம் பணித்தளங்களைப் பார்வையிடவும் ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்யவும் தாகோத்துக்கு வந்தோம். நம் பணித்தள அலுவலகம், மிஷனெரி இல்லம், பயிற்சிக் கூடங்கள் மற்றும் அலுவலக ஊழியர்களைக் கண்டு ஊழிய வளர்ச்சிகளையும் அற்புதமான தேவ வழிநடத்துதலின் சாட்சிகளைக் கேட்டு மகிழ்ந்து களிகூர்ந்தோம். குறிப்பாக ஷாரோன் மிஷன் மருத்துவமனையைப் பார்த்து டாக்டர். இன்பக்குமார் அவர்களுக்காக தேவனைத் துதித்தோம்.

27 ஆம் தேதி ஷாலோம் மிஷன் ஞாயிறு இராஜஸ்தான் மாநிலத்தில் ஆசரிக்கப்பட்டபடியால் அங்கு கும்புரா, கோய்க்கா, குண்டலா 1, குண்டலா 2 ஆகிய கிராம ஆலயங்களையும், விசுவாசிகளைக் காணவும் ஆராதனையில் பங்குப் பெற தேவன் கிருபைச் செய்தார். மிஷனெரிப் பணிக்காக உற்சாகமாய்க் காணிக்கைகளைப் படைத்ததைக் கண்டு மிக பரவசமானோம். கும்புரா ஆலயத்தில் பேராயரின் மூத்த மகன் **டைட்டஸ் – மெர்லின்** குடும்பமாக கலந்து செய்தி கொடுத்ததைக் கண்டு மகிழ்ந்தோம். குண்டலா கிராம ஆலயங்களில் வயல்வெளி, குன்றுகள் வழியாக நடந்து போன அனுபவம் மறக்க முடியாதது. மாலை 5 மணி வரை எங்களுக்காக காத்திருந்து செல்லும் நேரம் வரை தேவனைப் பாடி ஆராதித்தது மறக்க முடியாதவைகள். பின்பு பிஜல்பூர் கிராமத்தில் உள்ள ஷாலோம் பள்ளி மற்றும் மாணவர் விடுதியைப் பார்வையிடச் சென்றோம். இங்கு 300 க்கும் அதிகமான ஆதிவாசி மாணவ–மாணவிகளைக் கண்டு மகிழ்ச்சியடைந்தோம். சரியான ஹாஸ்டல் கட்டிடங்கள் இல்லை. கல்விப்பணி மிக அவசியம் அதற்காக நாம் ஜெபித்து அதிகம் தாங்க கடமைப்பட்டுள்ளோம் என்பதை உணர்ந்தோம்.

28 ஆம் தேதி திங்கட்கிழமை குடும்பமாக **பேராயர். தேவதாஸ்** அவர்களுடன் மத்தியப்பிரதேசத்தில் தெமோரா கிராமத்திற்குப் புறப்பட்டுச் சென்றோம். சுமார் 30 கிலோமீட்டர் தொலைவிற்கு மலைகள், குன்றுகள் நதிகளைக் கடந்து கரடுமுரடான பாதைகளில் கடந்து சென்றதை மறக்க முடியாது. போக்குவரத்து, மருத்துவம், பள்ளிக்கூடம் மற்றும் தொடர்பு வசதியில்லாத கிராமங்களில் பல நூறு வீடுகள் ஒரு முறை கூட இயேசு நாமம் அறியப்படாத ஜனங்கள் மத்தியில் நம் சகோதரர் குடும்பத்தைக் கொண்டு வந்த தேவனைத் துதித்தோம். ஆங்காங்கே காணப்பட்ட ஆட்டோ, ஜீப்புகளில் 20 பேர்கள், 50 பேர்கள் பிரயாணப்படுவது ஆச்சரியமாக இருந்தது.

போகும் வழியெல்லாம் விசுவாசிகள் நிறைந்த கிராமங்கள், ஆலயங்களைக் கண்டு தேவனைத் துதித்தோம். குறிப்பாக தெல்சர், போர்டி குவாலி, பத்ரா, நவாபாடா, மான்லி காளாமகத் கிராம ஆலயங்களைக் கண்டு மகிழ்ந்தோம். பின்பு தெமொரா கிராமத்தில் நுழைந்தவுடன் மேளதாளத்துடன் எங்களை வரவேற்று கூட்டிச் சென்றார்கள். விசுவாசிகள் ஆலயத்திற்கு முன்பாக நடனமாடி துதித்தார்கள். இந்தக் கிராம ஊழியர் **சகோ. மக்கன்சிங்** குடும்பம் இரட்சிக்கப்பட்ட அனுபவ சாட்சிகளைக் கூறினார்கள். அருகிலிருந்த சபை, ஊழியர்கள், மற்றும் மூத்த ஊழியர் மற்றும் பாப்புரியா கலந்து கொள்ள நாங்கள் குடும்பமாக ஜெபித்து கிராம ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்த அந்த நாளை மறக்கவே முடியாது.

பீலி மொழி பேசும் இவர்கள் கிராமங்களில் பாடல்களைப் பாடி தேவனை ஆராதித்தது மகிழ்ச்சியாக இருந்தது. பேராயர். தேவதாஸ் அவர்கள் செய்தி வழங்கி ஜெபித்த போது ஆவியானவர் வல்லமையாக இறங்கினார். ஆத்துமாவில் சுகம், அபிஷேகம், பெற்றனர். நாங்களும் ஜெபித்து சாட்சி மற்றும் வாழ்த்துச் செய்தியை குடும்பமாகக் கூறினோம். அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

அதன்பின்பு ரூபாகேடா கிராம ஆலயத்தைப் பார்வையிட்டு மத்தியப்பிரதேசத்தில் பிரதான ஆலயமான அந்தர்வேலியா கிராமத்தையும், ஊழியர்களையும் சந்தித்தோம். இப்போதே இப்படி கடினமான பகுதியாய் இருந்தது எனில் 22 வருடங்களுக்கு முன்பாக **பேராயர். தேவதாஸ்** அவர்களும் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** ஆகிய இருவரும் எவ்வளவு பாடுகள், முயற்சிகள், செய்திருப்பார்கள் என்பதை உணர்ந்து தேவனுக்கு நன்றி கூறினோம்.

இதை வாசிக்கும் அன்பானவர்களே 7000 கிராமங்களில் வாழும் 1 கோடி பீல் மக்கள் ரட்சிப்பின் திட்டத்தில் பேராயர். தேவதாஸ் குடும்பத்துடன் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து இன்னும் ஊழியங்களுக்காக ஜெபித்து தாங்கி, மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துவோம். **தேவனுக்கே மகிமை!**

**"எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்"** (நெகேமியா: 2:18)

*ஜெபியுங்கள்!* *பங்கு பெறுங்கள்!*

# வாக்குத்தத்த ஆசீர்வாத ஜெபக் கூடுகை

| | |
|---|---|
| நாள் : **03.12.2013 (செவ்வாய்)** | நேரம் : **காலை 9.30 மணி முதல்** மதியம் **1.00 மணி வரை** |

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**
5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

# ` ôúXôm ×§V ¡ û [ AÛYXLeLs

தேவ நாமம் மகிமைப்படுவதாக. பீல் ஆதிவாசிகளின் மத்தியில் நடைபெற்று வரும் ஷாலோம் ஊழியத்தை தேவன் விரிவுபடுத்தி வருகிறார். பெங்களூரில் புதிதாய் தொடங்கப்பட்ட கிளை அலுவலகத்தை நம் **பிஷப் V. தேவதாஸ்** அவர்கள் கடந்த **22.09.2013** தேதியன்று ஜெபித்து ஆரம்பித்து வைத்தார்கள். இந்த அலுவலகத்தில் பணிபுரியும் **சகோ. லெஸ்லி ரிச்சர்ட்** (Branch Co-Ordinator), **சகோ. பாண்டியன்** (Branch Co-Ordinator) மற்றும் **சகோ. அர்னால்ட் மோசஸ்** (Rep) போன்றோர்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

<u>தொடர்பு முகவரி</u>

**Mr. Leslie Richard.R**

Flat No. 204, Shakti Sunshine, 9th Main, Garvebhavipalaya Main Road,
Hongasandra, Bangalore-560068C Cell : 09884157773

---

கர்த்தரின் மாபெரும் கிருபையினால் கடந்த **2013** நவம்பர் மாதம் நாகர்கோவிலில் நமது புதிய கிளை அலுவலகம் தொடங்கப்பட்டது. இதில் **சகோ. ஜாண் ஸ்ரீதர்** முழு நேர பொறுப்பாளராகப் பணிபுரிகிறார். இவருக்காக ஜெபித்துக் கொள்ளவும்.

<u>தொடர்பு முகவரி:</u>

**Mr. John Sridhar,**

Branch of Sharing Love Mission, 6B1/A, Issac Street,
Nagercoil, K.K.Dist-629001, Cell : 9344675468

---

## ஊழியப்பகிர்வு

தேவ நாமம் மகிமைப்படுவதாக கடந்த **27.10.2013** அன்று தூத்துக்குடி மட்டக்கடை A.G. சபையில் ஞாயிறு காலையில் நடந்த இரண்டு ஆராதனைகளிலும் நம் **பிஷப். V. தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியத்தின் சாட்சிகளைக் கூறி, யாபேசின் ஜெபம் என்ற தலைப்பில் செய்தியளித்தார்கள். தேவ வார்த்தைகளையும் பீல் ஆதிவாசி மக்களின் மத்தியில் நடந்த சாட்சிகளையும் சபை விசுவாசிகள் கேட்டு ஆசீர்வாதம் பெற்றதோடு ஆத்துமப்பாரம் கொண்டனர்.

பாடல் கேசட்டுகள் மற்றும் ஷாலோம் ஊழியத்தின் சிறப்பு மலர்கள் போன்றவற்றை **சகோ. ஆலன், சகோ. சந்திரகுமார், சகோதரி. எப்சிபா** போன்றோர்கள் விசுவாசிகளுக்குக் கொடுத்து நம் ஊழியத்தைக் குறித்தும் விளக்கினார்கள். இந்த சபைப் போதகர் **Pr. ஸ்டீவன்சன் ஆண்ட்ரூஸ்** அவர்களைக் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

## ஜெப விண்ணப்பம்

உங்களுக்காக ஜெபிக்க வேண்டுமானால் தங்களின் ஜெபக்குறிப்புகளை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு காலை **10** மணி முதல் மாலை **5.30** மணிக்குள் எங்களோடு தொடர்பு கொண்டு தெரியப்படுத்தினால் உங்களுக்காக நாங்கள் பாரத்தோடு ஜெபிக்கிறோம்.

# ஞாபகப்படுத்துகிறோம்




## *அன்பான உண்டியல் ஆதரவாளர்களுக்கு,*

அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! கிறிஸ்துமஸ் பண்டிகை தினத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நாம், வரப்போகின்ற கிறிஸ்துமஸைக் கொண்டாட ஜெபித்து இப்பொழுதே ஆயத்தப்படுவது நமது கடமையாகும். மேலும் நமது பணித்தளங்களில் நாம் தாங்கி வரும் பீல் ஆதிவாசி விசுவாசிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் நன்றாகப் படித்தும், ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தும் வருகிறார்கள்.

பீல் ஆதிவாசி சிறுவர்களின் கல்வி மற்றும் கிறிஸ்துமஸ் நாளுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு, நீங்கள் எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் அந்த ஆதிவாசிப் பிள்ளைகளுக்கென காணிக்கைகளை சேகரித்து வைத்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம். இந்தக் காணிக்கையை ஆதிவாசிப் பிள்ளைகளின் கிறிஸ்துமஸ் தேவைகளுக்காகக் கொடுப்பீர்கள் என்று நம்புகிறோம்.

அதோடு பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகக் கொடுக்கலாம். அல்லது எங்களது தலைமை அலுவலகத்திற்கு நேரில் வந்தும் கொடுக்கலாம். அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O / D.D / Cheque** மூலமாக **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். நீங்கள் உண்டியலைத் திறக்க உங்களுக்கு சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468** என்ற செல் நம்பருக்குத் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

## ` ôúXôm 24 U ¦ úSW Ne¡-j ùRôPo ù_Tm



நாள் : **21.12.2013 (சனிக்கிழமை)**

நேரம் : **அதிகாலை 12.00 மணி முதல் மறுநாள் நள்ளிரவு 12.00 மணி வரை (24 மணிநேரம்)**

**நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஏதாவது ஒரு மணிநேரம் ஜெபிக்க விரும்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்.**

# பணித்தளங்களில் தேவ அற்புதங்கள்!

## குஜராத் மாநிலம்

**Pr. வில்சன் சங்கடா** **நகரிலா**

ஜத்னிபேன் என்ற சகோதரியின் மகள் காய்ச்சலினால் அவதியுற்றார். இவருக்காக ஜெபித்த போது தேவன் சுகம் தந்தார்.

மகன்பாய் என்பவர் நிலப்பிரச்சினையால் கவலையடைந்து சிரமத்திற்குள்ளானார். இவருக்காக ஜெபித்த போது தேவன் பிரச்சனைகளை மாற்றினார்.

**Pr. மத்தூர்** S. மெய்டா **தேவன்யாவத்**

சாத்தானின் பிடியிலிருந்து கர்திபேன் என்ற சகோதரி மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகம் தந்தார்.

**Pr. ராம்சு மோகனியா** **கார்படா மால்டலி**

பவுல் என்ற சகோதரருக்கு இரவு நேரத்தில் கைகால் வலி ஏற்பட்டு அவதியுற்றார். இவருக்காக ஜெபித்த போது தேவன் வேதனையை மாற்றினார்.

## இராஜஸ்தான் மாநிலம்

**Pr. கால்சிங் டி. டின்டோட்** **கரோடு**

சம்பா என்பவருடைய மகள் உடல் நலமில்லாமல் கஷ்டப்பட்டு வந்தார். இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகம் தந்தார்.

குடும்ப வறுமையில் கஷ்டப்பட்டு வந்த ஹக்மா என்ற சகோதரிக்கு தேவன் கஷ்டங்களை மாற்றி புதிய வாழ்வைக் கொடுத்துள்ளார்.

**Pr. வால்சிங் எச். நினாமா** **சக்வா**

சந்தோஷ் டொடியார் என்பவரின் குடும்பத்தில் சமாதானமில்லாமல் பிரச்சினையால் கஷ்டப்பட்டு இருந்த நேரத்தில் இவர்களுக்காக ஜெபித்த போது தேவன் பூரண சமாதானத்தைக் கொடுத்து குடும்பக் கஷ்டங்களை மாற்றினார்.

**Pr. சபு டின்டோட்** **புரகுவா**

பயங்கரமான வியாதியினால் கஷ்டப்பட்டு வந்த போர்ஜிபாய் என்பவரின் மனைவிக்காக பாரத்துடன் ஜெபிக்கவே தேவன் பூரண சுகம் தந்தார்.

காய்ச்சலினால் அவதிப்பட்ட ஷாத்திலால் என்ற சகோதரருக்காக ஜெபித்த போது தேவன் கிருபையால் இரங்கி நல்ல சுகம் தந்தார்.

**Pr. அர்ஜுன் சிங் மெய்டா** **லாலா**

அமளுபாய் என்ற சகோதரரை விஷப்பூச்சி கடித்துவிட்டது. வேதனையோடும் பயத்தோடும் இருந்த இவருக்காக ஜெபிக்கவே கர்த்தர் சுகம் தந்தார்.

ரபிக்காபேன் என்ற சகோதரி காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு மிகவும் அவதிப்பட்டு வந்தார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் சுகம் தந்தார்.

## மத்தியப்பிரதேசம் மாநிலம்

**Pr. மால்சிங் பி. கராசியா** **பிஹார்**

சஜீ என்ற சகோதரி விசுவாசத்தில் பின்மாற்றமடைந்தார். இதன் பின் பயங்கர வியாதிப்பட்டு ரூ. 1 இலட்சம் வரை செலவு செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகம் தந்தார்.

**Pr. முகேஷ் எச். வாசுனியா** **சொக்குவாடா**

மன்சுதாமோத் என்ற 20 வயது பையன் அசுத்த ஆவியினால் அலைக்கழிக்கப்பட்டு பயங்கர கஷ்டத்தில் இருந்த வேளையில் இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. சந்து பி. பர்மா** **சாந்தா**

சகோதரி சர்மாவுக்கு கால்களில் பயங்கரமான எரிச்சல் ஏற்பட்டு வேதனையில் வாடிய நேரத்தில் இவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண விடுதலை தந்தார்.

திப்லி என்பவருக்கு அசுத்த ஆவியின் கிரியைகள் இருந்து வந்தது. இதனால் அடிக்கடி தலைச்சுற்று ஏற்பட்டு அவதியுற்று வந்தார். இவருக்காகப் பாரத்துடன் ஜெபிக்கவே தேவன் அற்புத விடுதலையைக் கட்டளையிட்டார்.

பல நாட்களாக லீலா என்ற சகோதரிக்கு காது கேட்கவில்லை. இவருக்காக விசுவாசத்துடன் ஜெபித்த போது நன்கு காதுகள் கேட்கும்படி தேவன் கிருபை தந்தார்.

## 24 ×§V Àp ÑúRN F ¯VoLÞd Ï 1UôRlT« t£

தேவனுடைய பெரிதான கிருபையால் ஒவ்வொரு வருடமும் ஷாலோம் ஊழியத்தில் புதிய ஊழியர்களுக்கென்று விசேஷித்த 1 மாத வேதாகமப்பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்த வருடத்திலும் புதிதாக 25 ஊழியர்களுக்கென்று நவம்பர் 1 இல் இருந்து நவம்பர் 30 வரையிலும் 1 மாதம் விசேஷித்த வேதாகமப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது. இதில் **பேராயர் V. தேவதாஸ்** அவர்கள் மிஷனெரிப் பணியும் தரிசனமும் என்ற தலைப்பிலும் **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் இயேசுவின் வாழ்க்கையும் பரிசுத்த ஆவியும் என்ற தலைப்பிலும் **சகோ. கேரட்** அவர்கள் சுவிசேஷப் பணியும் என்ற தலைப்பிலும் மற்றும் **சகோ. ஜெயராஜ்** அவர்கள் சீஷத்துவமும் என்ற தலைப்பிலும் **சகோ. அணில் சௌகான்** அவர்கள் வேதாகம சித்தாந்தம் என்ற தலைப்பிலும், **சகோ. பாவ்சிங்** அவர்கள் பழைய & புதிய ஏற்பாடு விளக்கம் என்ற தலைப்பிலும், **சகோ. விகாஸ்** அவர்கள் வேதத்திலுள்ள முக்கியப் பாத்திரங்களின் வாழ்க்கை என்ற தலைப்பிலும், **சகோ. பிரங்களின்** அவர்கள் ஆராதனையைக் குறித்தும் வகுப்புகளை நடத்தினார்கள்.

புதிய ஊழியர்கள் இந்தப் பயிற்சியின் மூலம் வேத அறிவைப் பெற்றுக் கொண்டது மட்டுமல்லாமல் ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்தில் விடுதலையடைந்து பாவமன்னிப்பு மற்றும் புதிய உற்சாகம் பெற்று தேவனுக்காக பெரிய காரியங்களைச் சாதிக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் சென்றார்கள். நிச்சயம் தேவன் இவர்களைக் கொண்டு புதிய கிராமச் சபைகளை உருவாக்குவார். தேவனுடைய இராஜ்ஜியம் பீல் மக்கள் மத்தியில் கட்டப்படும். அல்லேலூயா.

# ஷாலோம் புதிய சுதேச ஊழியர் பயிற்சி முகாம்



பயிற்சி பெற்ற புதிய 24 பீல் சுதேச ஊழியர்களுடன் பயிற்சியாளர்கள் மற்றும் பிஷப் தேவதாஸ் அவர்கள் குடும்பம்

# சிறுவர் முன்னேற்ப் பணியாளர்களுக்கான சிறப்புக் கூடுகை




தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ளும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்



கவனத்தோடு பயிற்சிபெறும் பணியாளர்கள்



பயிற்சியில் பங்கு பெற்ற பணியாளர்களுடன் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்


# இயேசு அழைக்கிறார் இஸ்ரேல் ஜெபக்கோபுர திறப்பு மற்றும் பிஷப். தேவதாஸ் அவர்கள் குடும்பத்தாரின் இஸ்ரேல் பயணம்



இஸ்ரேல் ஜெபகோபுர திறப்பு வைபவம்


யோர்தான் நதியில் ஞானஸ்நானம்


ஒலிவமலைத் தோட்டத்தில் கர்த்தருடைய பந்தி


கலிலேயா கடற்கரை ஒர உணவகத்தில் "பேதுரு மீனை" சுவைக்கும் விருந்தினர்களுடன் Dr. பால் தினகரன் அவர்கள்


இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த கல்லறைக்கு முன்பாக


கெத்சமனே தோட்ட ஆலயத்தில்


எருசலேம் தேவாலயப் பார்வை



# வேதாகம தேசங்களில் சில தினங்களும் எருசலேமில் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுர திறப்பு விழாவும்

தேவ கிருபையால் முதன் முறையாக இஸ்ரவேல் தேசத்திற்குச் செல்லும் கிருபையை எங்கள் குடும்பத்திற்கு தேவன் இயேசு அழைக்கிறார் மூலமாக தந்தமைக்காக தேவனைத் துதிக்கிறோம். இஸ்ரவேல் தேசத்தில் எழுப்பப்பட்டுள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுர திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தோம்.

நவம்பர் 3 ஆம் தேதியன்று 14 தேசங்களிலிருந்து வந்திருந்த தேவ ஜனங்கள், ஊழியர்கள், போதகர்கள், பிஷப்புகளாக 1400 பேர் பங்கெடுத்த சிறப்புக் கூடுகையை அன்பு **சகோ. Dr. பால் தினகரன்** குடும்பத்தார் வரவேற்று காருண்யா பல்கலைக்கழகம் மற்றும் இஸ்ரவேல் பல்கலைக் கழகமும் இணைந்து பெரிய காரியங்களைச் செய்யும்படியான ஒப்புதல்கள் நிறைவேற்றப்பட்டன. அதன்பின் போதகர் பென்னி ஹின் அவர்கள் சிறப்பு செய்தியளித்து ஜெபித்தார்கள். நவம்பர் 4 ஆம் தேதி இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம் தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது. **சகோ. Dr. பால் தினகரன்** அவர்களுக்கு தேவன் தந்த தரிசனத்தின்படி உலக நாடுகளுக்காக ஜெபிக்கவும், குறிப்பாக இஸ்ரவேலின் சமாதானத்திற்காக ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்தார். அந்த உன்னதமான நாளிலும் போதகர் பென்னி ஹின் அவர்கள் தேவ செய்தியினை அளித்து அனைவருக்காகவும் ஜெபித்த போது பரிசுத்த ஆவியானவரின் அபரிமிதமான அபிஷேகம், தீர்க்கதரிசன வரமும் இறங்கிவந்தது. தேவனுக்கே மகிமை!

மட்டுமல்ல நாங்கள் குடும்பமாக எங்களுடன் இணைந்த குழுவுடன் சேர்ந்து இஸ்ரவேல் தேசத்தைப் பார்க்க தேவன் கிருபை தந்தார். இயேசு கிறிஸ்து பிறந்த பெத்லகேம், அவர் வளர்ந்த நாசரேத், Jesus Town என்று அழைக்கப்படும் கப்பர்நகூம், மலைப்பிரசங்கம் நடைபெற்ற இடம், 5000 பேர்களுக்கு போதித்த இடம் குறிப்பாக கலிலேயா கடற்கரைப் பகுதிகள், கடலில் பிரயாணம் செய்த பகுதி இவைகளை மறக்க முடியாது.

யோர்தான் நதியில் எங்கள் குழுவில் வந்த அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுக்க தேவன் கிருபைச் செய்தார். மேலும் எருசலேம் தேவாலயம், கோட்டை, சீயோன் மலை, பெதஸ்தா ஆகியவற்றைக் கண்டபோது, விசேஷமாக ஒலிவமலை, கெத்சமனே தோட்டம், கிறிஸ்து பவனி வந்த பாதை, கர்த்தருடைய இராப் போஜனம் நடந்த மேலறை மற்றும் இயேசு கிறிஸ்து பாடுபட்ட இடங்கள், விசாரித்து நியாயம் தீர்க்கப்பட்ட காய்பா அரண்மனை போன்ற இடங்கள், சிலுவை சுமந்த பாதை, கொல்கதா இவைகளைப் பார்த்து தேவனை மகிமைப்படுத்தினோம்.

விசேஷமாக கிறிஸ்து உயிர்த்தெழுந்த இடத்திலுள்ள காலியான கல்லறையைக் கண்டபோது உயிர்த்தெழுந்த வல்லமை எங்களை ஆட்கொண்டது. அந்த தோட்டத்தில் திரும்பிவந்து ஆராதனை நடத்த தேவன் கிருபை தந்தார். இயேசு கிறிஸ்துவின் அன்பு எங்கள் அனைவரையும் நிரப்பியது.

கிறிஸ்து பரத்துக்கேறும் முன்பாக பேதுருவை சந்தித்த கடற்கரை, பெந்தேகொஸ்தே நாள் மேலறையைக் கண்டு மகிழ்ந்தோம். தேவ அன்பும், வல்லமையும் எங்களை ஆட்கொண்டது. தேவன் மோசேயை எடுத்துக் கொண்ட **"நேபோ மலை"** மற்றும் எலியாவின் கர்மேல் பர்வதம் ஆகியவை உன்னதமான அனுபவங்களைக் கொண்டு வந்தது. எங்களுடன் அநேகர் குறிப்பாக சகோ. **சாம் ஜெபத்துரை, சகோ. வின்சென்ட்** மற்றும் அநேக பிஷப்மார்கள், போதகர்கள் கலந்து கொண்டது மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது. குறிப்பாக **சகோ. சாம் ஜெபத்துரை, சகோ. வின்செனட்** ஆகியோர் ஒவ்வொரு இடங்களையும் குறித்துப் பேசி ஜெபங்களை நடத்தியபோது பெற்ற ஆவிக்குரிய அனுபவங்கள் உன்னதமான அனுபவமாகும். எல்லா மகிமையும் தேவனுக்கே உண்டாகட்டும்.

மிக நேர்த்தியாக ஒழுங்கு செய்திருந்த இயேசு அழைக்கிறார் மற்றும் Dr. பால் தினகரன் அவர்கள் குடும்பத்திற்காகவும் தேவனைத் துதிக்கிறோம். இயேசு அழைக்கிறார் ஊழியங்களுக்காகவும், காருண்யா பல்கலைக்கழக பணிகளுக்காகவும், சீஷா ஊழியங்களுக்காகவும் குறிப்பாக இஸ்ரவேலில் தேவன் தந்த எருசலேம் ஜெபகோபுரத்திற்காகவும் தேவனுக்கு நன்றி கூறுகிறோம்!

**"எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக"** சங். 122 : 6


| | |
|---|---|
| **ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை** | நாள் **14.12.2013,** ***சனிக்கிழமை*** நேரம் *மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை* |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**
M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

**அனைவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிப்பதுடன், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.**

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்



- ❋ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் நமது தலைமுறையில் இரட்சிக்கப்படவும், அவர்கள் வசிக்கும் 7000 கிராமங்களிலும் ஊழியர்கள் மற்றும் சபைகள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.
- ❋ பணித்தளங்களில் ஒவ்வொரு வெள்ளியும் நடைபெற்றுவரும் சுகமளிக்கும் ஆராதனைக்காக, அதில் அநேகர் கலந்து கொண்டு அற்புதங்களைப் பெற்று தேவனண்டையில் சேர ஜெபியுங்கள்.
- ❋ தேவக் கிருபையினால் தற்போது 3 மாநிலங்களிலுள்ள 23 கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக் கட்டுமானப் பணிகளை தேவன் ஆசீர்வதிக்கவும், அதற்கானத் தேவைகளை தேவன் சந்தித்து, ஆலயங்கள் பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.
- ❋ Shalom Charity Mission மூலமாக தாங்கப்பட்டு வரும் பீல் ஆதிவாசி மாணவர்களை தேவன் நல்ல ஞானத்தைத் தந்து ஆசீர்வதிக்கவும், அவர்களின் கல்வித் தேவைகளைச் சந்திக்கவும், ஆதரவாளர்கள் இல்லாத மாணர்களுக்கு ஆதரவாளர்கள் கிடைக்கவும் ஜெபியுங்கள்.
- ❋ இந்த 2013 ஆம் ஆண்டிற்குள் சுமார் 7000 பீல் ஏழை ஆதிவாசி விசுவாசிகளுக்கு குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் வழங்கப்பட வேண்டும். இதற்கு ஒரு வேதாகமத்திற்கு ஆகும் செலவு ரூ. 100/– ஆகும். 7000 வேதாகமங்களுக்கான தேவைகள் சந்திக்கப்படவும், விசுவாசிகளுக்கு வேதத்தின் மூலம் ஒரு பெரிய ஆசீர்வாதத்தினைக் கட்டளையிடவும் ஜெபியுங்கள்.
- ❋ **பேராயர். தேவதாஸ்** மற்றும் அவர்கள் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் விஷேசமாக ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்கு தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தை பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாக பயன்படுத்த ஜெபியுங்கள்.
- ❋ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம், சென்னை மற்றும் மார்த்தாண்டம் கிளை அலுவலகம் போன்ற அலுவலகங்களில் தேவனுடைய ஊழியத்தினை நிறைவேற்றி வரும் நமது சகோதர சகோதரிகளுக்காகவும், மேலும் ஊழியத்தில் தன்னார்வமாய் செயல்பட்டு காணிக்கைகளைச் சேகரித்து அனுப்பும் பிரதிநிதிகளுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.
- ❋ இந்த மாதம் பணித்தளங்களில் நடைபெறும் கிறிஸ்துமஸ் மேளா மற்றும் சிறப்பு ஆராதனைகளுக்காகவும், பீல் சுதேச ஊழியர்கள் மற்றும் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கான புத்தாடை மற்றும் அன்பளிப்புகளுக்கான ரூ. 10லட்சம் தேவை சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 9

**பதில் எழுதுக :**

1. நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கை நமக்கு எதுவாக இருக்கிறது?
2. பொகியாவின் தகப்பன் பெயர் என்ன?
3. சூளையில் எரிகிற துரும்பு யார்? யார்?
4. எது உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது?
5. "எப்பத்தா" என்பதன் அர்த்தம் என்ன?
6. எங்கு கோபுரம் விழுந்து பதினெட்டு பேரைக் கொன்றது?
7. பவுல் பணம் கொடுப்பான் என்று நம்பிக்கையாயிருந்தவன் யார்?
8. நம்முடைய தலைச்சீரா எது?
9. பாலாக் யாருடைய குமாரன்?
10. மோசே அடக்கம் பண்ணப்பட்ட இடம் எது?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **18.12.2013**

**கடந்த மாத போட்டிக்கான சரியான விடைகள் :**

| | |
|---|---|
| 1. யோவேல் (யோவேல் 1 : 10) | 6. இறுமாப்பாயிருக்கும். (நீதி. 18 : 12) |
| 2. நினிவே (நாகூம். 2 : 8) | 7. தக்பானேசிலே (எசேக். 30 : 18) |
| 3. மனுஷனுடைய ஆவி (நீதி. 20:27) | 8. அநீதி (பிரசங்கி 3 : 16) |
| 4. கண் (லூக் 11:34 (or) மத். 6 : 22) | 9. மோசே (எபி. 3:5 (or) 3 : 2) |
| 5. நேபோ (உபா. 34:1) | 10. ரப்பா (எசேக். 25 : 5) |

**கடந்த மாத வேத வினாப் போட்டி 8 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. Sis. ஜேனற் சத்தியா,** தூத்துக்குடி. **2. Bro. நவரத்தினம் ஞானராஜ்,** நாசரேத், **3. Bro. மைக்கேல் ஜோசப்,** திருநெல்வேலி

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

# காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- ❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ காணிக்கைகளை M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ❖ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- ❖ உங்களது வங்கிக் கணக்கில், Net Transfer வசதி இருந்தால் Net Transfer மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.
- ❖ **www.shalommission.in** இணைய தளத்தின் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.

***நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகளில் எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

AXIS BANK
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

ICICI Bank
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

***குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப,***

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கின் பெயர் | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கிக் கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கிக் கணக்கு எண் | : | **174100710400061 - Tiruchendur Road Branch - Tuticorin** |

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் காணிக்கை செலுத்தியபின், உடனடியாக இந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

## நாட்டு நடப்புச் செய்திகள்

பிலிப்பைன்ஸ் நாட்டினை தைப்பூன் ஹையான் என்ற சூறாவளி தாக்கியதால் ஒரு மாகாணத்தில் மாத்திரம் பத்தாயிரத்திற்கும் அதிகமானோர் பலியாகியிருப்பதாக நம்பப்படுகிறது. லெய்தேவின் தலைநகரில் அனைத்து வீடுகளும் தரைமட்டமாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கு சுத்தமான குடிநீர், மின்சாரம், உணவு போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமலும் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

கடந்த மாதம் எகிப்தின் தலைநகரான கெய்ரோவின் தெற்கே லெவல் கிராஸிங்கை மினி பஸ் மற்றும் ஒரு டிரக் ஆகியவை கடக்க முயன்றபோது ரெயில் மோதி விபத்து ஏற்பட்டது. டாஷூர் என்ற கிராமத்தின் அருகே நடந்த இந்த விபத்தில் 26 பேர் பலியாகியுள்ளனர். 28 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட பி.எஸ்.எல்.வி. ராக்கெட், மங்கள்யான் என்று அழைக்கப்பட்ட செவ்வாய் கிரகத்தை ஆராயும் கலன் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது. டிசம்பர் 1 ஆம் தேதி வாக்கில் இந்தக் கலன் புவி ஈர்ப்பு விசையை உடைத்து வெளியேறி செவ்வாய் கிரகத்தை நோக்கி தனது நீண்ட பயணத்தைத் துவக்கும். திட்டமிட்டபடி எல்லாம் சரியாகச் சென்றால் அடுத்த ஆண்டு செப்டம்பர் 21 ஆம் தேதியன்று இந்தக் கலன் செவ்வாய் கிரகத்தை அடையும்.

வடக்கு ஆஸ்திரேலியாவை அண்டிய கடலில் புதிய வகையான கூன்முதுகு கொண்ட டால்பின் மீன் இனத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இந்த டால்பின் மீன் இனத்திற்கு அதிகாரப்பூர்வமான பெயர் எதுவும் இதுவரை வைக்கப்படவில்லை. இந்த மீன் இனங்களுக்கு முதுகில் உள்ள துடுப்பு போன்ற சிறகிற்குக் கீழே கூன் விழுந்திருக்கும்.

நன்றி : www.bbc.co.uk


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

தூத்துக்குடியில் **ஷாலோம்** வழங்கும்

# "உன்னத ராஜனைப் போற்றுவோம்"

## இயேசு கிறிஸ்துவின் பிறப்பினை பறைசாற்றும் ஓர் நிகழ்ச்சி

நாள்
**06.12.2013**
**வெள்ளி**

நேரம்
**மாலை**
**6.00 மணி**

இடம்
**ராஜ் மஹால்**
பழைய பேருந்து நிலையம் அருகில்,
தூத்துக்குடி.

நிகழ்வன


- இனிய பாடல்கள்!
- குறு நாடகம்!
- சிறுவர் நடனம்!
- Choreography!
- U.V. Light Programme!
- கிறிஸ்துமஸ் செய்தி

பாடல்கள் : முத்துநகர் நற்செய்தி பாடகர் குழு



**பெத்லகேம் ராஜன் இயேசுவை மகிழ்வுடன் வாழ்த்த**
**குடும்பமாய் வாருங்கள்!**

பீல் ஆதிவாசி குழந்தைகள் மற்றும் சுதேச ஊழியர்களுக்கு
கிறிஸ்துமஸ் வெகுமதிக்கான காணிக்கைகள் ஏற்கப்படும்



**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
**Phone: 0461 - 2375468, Cell : 9345675468**


For unto us a child is born,
unto us a son is given... Isaiah 9:6-
Christmas Greetings
Christmas is the
time of Giving, Sharing,
Loving & Forgiving
Happy Christmas!
கிறிஸ்துமஸ் நல் வாழ்த்துக்கள்!
By
Rt. Rev. Dr. V. Devadass & Family,
Sharing Love Mission,
Shalom Diocese in India,
Shalom Charity Mission.